ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2362/67 - 2023 දෙසැම්බර් මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.12.14

*2362/67 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பீ. 19/78* (VI)

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின்கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கலாநிதி **விஜயதாச ராஜபக்ஷ,**
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023, திசெம்பர் 08.*

**ஒழுங்குவிதிகள்**

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டு யூலை மாதம் 2 ஆந் திகதிய 43/4 ஆம்* இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள், அவ்வொழுங்குவிதிகளின் அட்டவணையில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-

*(1)* அதன் நிரல் I இல் காணப்படும் "கொழும்பு நீதி நிருவாக வலயத்தில் நடைபெறும் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம்" தொடர்பான பதிவுக்கு நேரொத்ததாகவுள்ள அதன் அட்டவணையின் நிரல் II இல்-

1A - G 41022 — 31 (2023/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) அதன் விடயம் 1 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"1. மேல் நீதிமன்றத்தினால் கேட்கப்படுதல் வேண்டுமென குறித்துரைக்கப்படுகின்றதான 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் II ஆம், III ஆம் மற்றும் IV ஆம் பாகங்களின் கீழான தவறுகள் தொடர்பிலான எல்லா குற்ற வழக்குகள், நடவடிக்கைகள் அல்லது கருமங்கள், நீதிமன்றமெதுவும் குறிப்பாக நியமிக்கப்படாதிருத்தல் தொடர்பில் இச்சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பிலான எல்லா குற்ற வழக்குகள், நடவடிக்கைகள் அல்லது கருமங்கள் உட்பட கொழும்பு நீதி நிருவாக வலயத்தில் நடாத்தப்படும் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தினால் கேட்கப்படுதல் வேண்டும்.";

(ஆ) அதன் விடயம் 4 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"4. இலங்கையிலுள்ள ஏதேனும் நீதி நிருவாக வலயத்தினுள் புரியப்படுவனவும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 120 ஆம் பிரிவின் கீழானவையுமான தவறுகள் தொடர்பிலான எல்லாக் குற்றவழக்குகளும், நடவடிக்கைகளும் அல்லது கருமங்களும்."

(இ) அதன் விடயம் 5 இனை நீக்கிவிட்டு ; அத்துடன்

(2) அதன் நிரல் I இல் காணப்படும் "கொழும்பு நீதிவான் நீதிமன்றம்" தொடர்பான பதிவுக்கு நேரொத்ததாகவுள்ள அதன் அட்டவணையின் நிரல் II இல்-

(அ) அதன் விடயம் 3 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"3. நீதிவான் நீதிமன்றத்தினால் கேட்கப்படுதல் வேண்டுமென குறித்துரைக்கப்படுகின்றதான 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் II ஆம், III ஆம் மற்றும் IV ஆம் பாகங்களின் கீழான தவறுகள் தொடர்பிலான எல்லா குற்ற வழக்குகள், நடவடிக்கைகள் அல்லது கருமங்கள் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் கேட்கப்படுதல் வேண்டும்"; அத்துடன்

(ஆ) அதன் விடயம் 4, 5 மற்றும் 6.

EOG 12-0224

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.